


நகர் ஊரமைப்பு துறை

தர்மபுரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம்

தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், அதியமாங்கோட்டை ஊராட்சி மற்றும் கிராமம், நி.அ. எண்.867/2C1B3-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான மனைகள் அமைப்பு தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

வ

கோப்பு எண்	: 12SF3YBT / 2025 / TCP7
அளவுத் திட்டம்	: 1 : 800 (1"=66'-0")

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பளவு	: 30890.00 ச.மீ (அ) 7.63 ஏக்கர்
சாலையின் பரப்பளவு	: 8493.74 ச.மீ
மீதமுள்ள பரப்பளவு	: 22396.26 ச.மீ
கோரிய மனைகள்	: 104
ஒதுக்கிய மனைகள்	: 102 (E.W.S மனைகள் உட்பட)
மனைப்பிரிவின் எல்லை	:
நிலையிலுள்ள சாலை	:

A. பொது ஒதுக்கீடுகள் :- (உத்தேச சாலைப்பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)

உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டவை

பூங்கா : 2256.46 ச.மீ - 10.08%

உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு : 8493.74 ச.மீ

B. பொது உபயோகம்:- (TNCD&BR 2019, 47 (8)-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட 1% ஒதுக்கீடு)

1. உள்ளாட்சிக்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு : 121.92 ச.மீ - 0.54%

2. தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு (TANGEDCO) : 130.51 ச.மீ - 0.58%

ஒதுக்கீடுகள்:- (விற்பனைக்குரியவை)

E.W.S மனைகளின் பரப்பளவு: 2300.16 ச.மீ 10.27 %

E.W.S மனை எண்கள் : 36-48, 58-67 (ம) 76-85.

மூலைமுடக்கு

7.20 மீ - 12.00 மீ அகல சாலை 1.50 மீ x 1.50மீ

நிபந்தனைகள்:

1. இம்மனைபிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆர்ஜித நடவடிக்கையும் இல்லை என்பதையும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலரால் பெறப்படவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைபிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களால் இரத்து செய்யப்படும்.

3. குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கான E.W.S மனைகள் 36-48, 58-67 (ம) 76-85 வரையிலான மனைகளை மனை உட்பிரிவு / மனை உபயோக மாற்றம் / மனை ஒருங்கிணைப்பு செய்தல் கூடாது. மேலும் 9.0மீ அகல சாலையில் அமையும் E.W.S மனைகளுக்கு கட்டிட வரம்பு 1.0மீ பொருந்தும்.

4. உதவி இயக்குநர் தர்மபுரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் இடநேரய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு உரிய அனுமதிப்பெறப்பட வேண்டும்.

ம.வ / ந.உ.இ.எண் : 18 / 2025

நகர் ஊரமைப்பு இயக்குநர்

Signature valid Signature valid Signature valid

Signed by: Director
Location: null
Date: 2025.02.18

Signed by: Assistant Director
Location: Dharmapuri
Date: 2025.02.21

Signed by: Village Panchayat President
Location: Dharmapuri
Date: 2025.07.19